**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 210/2021.**

**வழக்கு சாட்சி – அ.சா. 3.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மகேந்திரன். | ஜாதி | |
| தந்தை பெயர் | பழனிச்சாமி. | தொழில் | நகைத் தொழில். |
| கிராமம் | அரண்மனைப்புதூர். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 47/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு ஆஜர்).**

**அ.சா.3 சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இவ்வழக்கில் இறந்துபோன நபர் எனது பக்கத்துவீட்டுக்காரர் என்றால் சரிதான். விபத்துச் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் இரவு 07.30 மணியளவில் நடைபெற்றதாக நான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். விபத்து தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான். விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். இறந்த நபர் எனது பக்கத்துவீட்டுக்காரர் என்பதால், நான் அ.சா.1–க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. விபத்து இறந்துபோன முருகேசன் என்பவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.09 17:20:19 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**